Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

உறுப்பிலக்கணம்

1. (அ) வாழ்த்துவம் - வாழ்த்து + வ் + அம்
   வாழ்த்து - பகுதி; வ் -- எதிர்கால இடைநிலை; அம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
2. (அ) வாழ்த்துவோம் - வாழ்த்து + வ் + ஓம்
   வாழ்த்து - பகுதி
   வ் - எதிர்கால இடைநிலை
   ஓம் - தன்மை பன்மை வினைமுற்று விகுதி.

நெடுவினா

3. அன்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே! ஆன்றோரே! தாய்மாரே! பணிவான வணக்கத்தை முதலில் இயம்புகிறேன்.
   சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :
   அன்னைத்தமிழுக்கு அணிசேர்த்தவருள் ஒருவர், பேராசிரியர் சுந்தரனார் ஆவார். 1891ஆம் ஆண்டு அவர் 'மனோன்மணீயம்' எனும் சிறந்த நாடக நூலைப் படைத்தார். அந்நாடகத்தின் தலையணியாய் விளங்குவது, தமிழ்த்தெய்வ வணக்கப்பகுதியாகும்.
   சுந்தரனார் அப்பகுதியில், நிலத்தைப் பெண்ணாகவும், பாரத நாட்டை அப்பெண்ணின் முகமாகவும். தென்னிந்தியாவை அப்பெண்ணின் நெற்றியாகவும், திராவிடநாட்டை அந்நெற்றியில் உள்ள திலகமாகவும், தமிழை அத்திலகத்தின் நறுமணமாகவும் உருவகித்துக் காட்டியுள்ளார்.
   திராவிட மொழிகள் என்னும் குங்குமத்திலிருந்து தமிழ் எழுந்து, உலகமெங்கும் பரவித் தன் இலக்கிய இலக்கண மணத்தை நுகரும் எல்லாரையும் மகிழச்செய்கிறது என்கிறார், சுந்தரனார். இவ்வாறு போற்றிய சுந்தரனார், சிறப்புக்குன்றா செந்தமிழை, "நின் சீரிளமைத் திறம் வியந்து வாழ்த்துதுமே" எனப் பாடி நிறைவு செய்கிறார்.
   பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்து :
   தமிழ்மொழி என்று, எங்கு, எப்படித் தோன்றியது என்னும் வினாக்களுக்குப் பெருஞ்சித்திரனார் முதல் பாட்டின்மூலம் விடை கூறுகிறார். 'இந்த நூற்றாண்டில் தோன்றியது' என்று கூற இயலாது என்பதை, "முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!" என்கிறார், பாவலரேறு. கடலால் கொள்ளப்பட்ட இலெமூரியாக் கண்டத்தில், பாண்டிய மன்னர்கள், இரு சங்கங்களைத் தோற்றுவித்து, தமிழினை உலக மொழிகளுக்குப் பேரரசியாய் இலங்கச்செய்தனர்.
   சங்ககாலத்தில் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தோன்றின. சங்கம் மருவிய காலத்தில் ஐம்பெருங்காப்பியங்களும் பதினெண்கீழ்க்கணக்கும் தோன்றின. வேற்று இனத்தவர் ஆட்சியில் தமிழ் வளர்ச்சி தளர்வுற்றது என்றாலும், அது வீழாது நிலைத்து நின்றது. பிறநாட்டினரின் புகழுரைகள் எழுச்சி கொள்ள வைக்கின்றன என்கிறார், பாவலரேறு.
   நிறைவாய், 'செந்தாமரைப்பூவில் தேனைப் பருகி, அழகிய சிறகை விரித்துப் பறந்து பண்ணிசைக்கும் வண்டினைப் போல நாங்களும் உம் புகழை முழக்கிப் பரப்பிட முன் வந்தோம்' என்கிறார் பெருஞ்சித்திரனார்.
   பாடும் முறையில் கவிஞர்கள் இருவரும் வேறுபட்டாலும் தமிழைப் பரவி வாழ்த்துவதில் ஒன்றுபடுகின்றனர்.
   நன்றி.

சிறுவினா

4. 1. தமிழ் தோன்றிய காலத்தை வரையறுக்க முடியாத தொன்மை வாய்ந்தது.
   2. அன்றைய குமரிக்கண்டத்தில் பாண்டிய மன்னர்கள் இருதமிழ்ச்சங்கங்களைத் தோற்றுவித்துத் தமிழை வளர்த்தனர்.
   3. அப்போது உலகமொழிகளுக்கெல்லாம் பேரரசியாய் விளங்கியது, தமிழ்.
   4. சங்ககாலத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் தோன்றின.
   5. சங்கம் மருவிய காலத்தில் ஐம்பெருங்காப்பியங்களும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் தோன்றின.
   இவையே பாவலரேறு தமிழன்னையை வாழ்த்தக் காரணங்கள்
5. (i) செழுமை மிகுந்த தமிழே! என்னுயிரே! சொல்லுவதற்கு அரிதான உன்னுடைய பெருமைகளை என் தமிழ் நாக்கு எவ்வாறு தான் விரித்துரைக்கும்.
   (ii) பழம்பெருமை, தமக்கெனத் தனிச்சிறப்பு, இலக்கிய வளம் கொண்ட தமிழே!
   (iii) உன்னுடைய நிலைத்த தன்மையும் வேற்றுமொழி பேசுபவர்கள் உன்னைப் பற்றிக் கூறிய புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.

   "செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த
   அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி"

   (iv) என் தனித்தமிழே! வண்டு செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போல நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

குறுவினா

6. (i) தென்மொழி
   (ii) தமிழ்ச்சிட்டு
7. **வண்டு - தேன்:**
   உள்ளத்தில் கனல் மூள வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுகின்றது.
   தமிழர் - தமிழ்ச்சுவை:
   தமிழர் செந்தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை எங்கும் முழங்குகின்றனர்.
8. (i) எட்டுத்தொகை
   (ii) பத்துப்பாட்டு

9.

பாப்பத்து	பத்துப்பாட்டு	10
எண் தொகை	எட்டுத்தொகை	8
நற்கணக்கு	பதினெண்கீழ்க்கணக்கு	18
மொத்த நூல்களின் எண்ணிக்கை		36

புணர்ச்சி விதிகள்

10. **(அ) எந்தமிழ் - எம் + தமிழ்**
"மவ்வீறு வன்மைக்கு இனமாய்த் திரிபவும்" என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மகரமெய்(ம்) வருமொழி வல்லினத்திற்கு(த்) இனமான மெல்லினமாய்த்(ந்) திரிந்து புணர்ந்தது."

11. **(அ) எண்தொகை - எட்டு + தொகை**
"எட்டன் உடம்புணவ் வாகும்" என்னும் விதிப்படி, வருமொழியோடு புணரும் போது நிலைமொழி ஈற்று உயிர்மெய் (டு) கெட இடைநின்ற 'ட்' என்னும் மெய்யெழுத்து 'ண்' எனத் திரிந்து 'எண் + தொகை -எண்தொகை' என ஆனது.

இலக்கணக் குறிப்பு

12. (அ) உருவகம்

13. (அ) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

3 Marks

14.

2 Marks

15. **உயிர் எழுத்து**

Multiple Choice Question

16. (c) எம்+தமிழ்+நா

17. (c) பெருஞ்சித்திரனார்

18. (c) திருக்குறள் மெய்ப்பொருளுரை

QB 365 Study Material
QUESTION BANK 365